OS: 509/2018

Date: 20.07.2022

பெயர் : மனோகரன்

**வாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி - 1, 2 பிரதிவாதிகள் தரப்பில்**

வா.சா.ஆ.3 ஆவணம் பட்டா கோவில் பெயரில் உள்ளது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் பட்டா எண்.2 ஆனது யார் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் கோவில் பெயரில்தான் உள்ளது. மேற்படி பட்டா **பி.வா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பி.சா.ஆ.1 பட்டாவில் குறிப்புரையில் எந்தெந்த ஆண்டுகள் என குறிக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.3 பட்டாவில் எந்த குறிப்புகளும் இல்லை என்றால் சரிதான். நான் பொய்யான தகவல் கொடுத்து குறிப்புரைகள் ஏற்றப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 அ பதிவேட்டின்படி சௌடேஷ்வரி அம்மாள் பெயரில்தான் சொத்தானது அமைந்துள்ளது என்றும், கோவில் பெயரில் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. தேவாங்க செட்டியார் திருமண மண்டபம் தர்மபுரி ரோட்டிற்கு எந்த பக்கம் உள்ளது என்றால் மேற்கு பக்கத்தில் கிழக்கு பார்த்து அமைந்துள்ளது. மேற்படி தேவாங்க செட்டியார் திருமண மண்டபத்திற்கும், வழக்கு போட்டுள்ள இடத்திற்கும் இடையே சுமார் 100 அடி தூரம் இருக்கும். தேவாங்க செட்டியார் திருமண மண்டபம் இடிக்கப்பட்டு தற்போது கடைகள் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தேவாங்க செட்டியார் திருமண மண்டபம் இடிக்கப்பட்டதற்கான தீர்மானங்கள் இயற்றப்பட்டதா என்றால் சரிதான். ஆனால் அதனை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. தேவாங்க செட்டியார் திருமண மண்டபத்தை இடித்து புதிதாக கட்டப்பட்டதற்கான வரவு செலவு கணக்குகள் வைக்கப்பட்டுள்ளதா என்றால் சபையில் காட்டியுள்ளோம். தேவாங்க செட்டியார் திருமண மண்டபத்தை இடித்து புதிதாக கட்டப்பட்டதற்கு இந்த சமய அறநிலையத்துறையில் அனுமதி வாங்கப்பட்டதா என்றால் இல்லை. தேவாங்க செட்டியார் திருமண மண்டபத்திற்கும் தாவா சொத்திற்கும் சம்மந்தம் உள்ளதா என்றால் ஒரே சொத்துக்கள்தான். கோவில் சொத்து எந்தெந்த சர்வே எண்களில் உள்ளது என்றால் பேருந்து நிலையத்திற்கு பின்பக்கத்தில் உள்ளது, பயணியர் மாளிகைக்கு எதிர் பக்கத்தில் உள்ளது, சர்வே எண்கள் எனக்கு நியாபகம் இல்லை. மேற்படி பேருந்து நிலையத்திற்கு கிழக்கு பக்கம் உள்ள சொத்தானது சைக்கிள் ஸ்டாண்டிற்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது, அந்த சொத்தின் வழியாகத்தான் தாவா சொத்திற்கு சென்று வரமுடியும் என்றால் சரியல்ல. தர்மபுரி மெயின் ரோட்டிலிருந்து தாவா சொத்தின் வழியாகத்தான் பொது மக்கள் சென்று வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்து வழியாக சென்றால் பஸ் நிலையத்திற்கும் புதுத்

தெருவுக்கும் செல்ல முடியும் என்றால் சரியல்ல, இதற்கும் தாவா சொத்திற்கும் சம்மந்தம் இல்லை. தாவா சொத்தின் வழியாகத்தான் பஸ் நிலையத்திற்கும் புதுத் தெருவுக்கும் பொது மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள் என்றும், தற்போது நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் வழியாக்கத்தான் தங்கம் தியேட்டர் மற்றும் கந்தசாமி திருமண மண்டபத்திற்கு செல்ல முடியும் என்றால் முடியாது, அது தனி வழி. வா.சா.ஆ.22 ன்படி பிரதிவாதிகள் பால்கனியை விரிவாக்கம் செய்ய முயற்சிக்கிறார்கள் என காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது. அந்த புகாரில் எந்த தேதி, மாதம் கொடுக்கப்பட்டது என்றால் தேதி, மாதம் குறிப்பிடப்படவில்லை. நான் Printing press வைத்துள்ளேன். மற்றொரு புகாரானது காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டுள்ளது, அதிலும் தேதி, மாதம் குறிப்பிடப்படவில்லை. மேற்படி புகாரானது இ.ம.423/2008ல் ம.ச.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி காவல் நிலையத்தில் அளித்த புகாரில் தர்மகர்த்தாக்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் யார் யார் தர்மகர்த்தாக்கள் என பெயர் குறிப்பிடப்படவில்லை. மேற்படி புகாரின் அசலை காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது என்றும், அதன் நகலைத்தான் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேன். மேற்படி காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட புகாரானது எனது Printing pressல் வைத்து தயாரிக்கப்பட்டது என்றும், அது நகல் அல்ல, அசலாகவே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட புகாரானது என்னால் தயாரிக்கப்பட்டது என்றும், அதுபோன்று புகார்கள் காவல் நிலையத்தில் அளிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு வடபுறம் 1, 2 பிரதிவாதிகளின் கடைகள் உள்ளது என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் தற்போது இருக்கும் இடத்தில் வாடகைதாரர்களாக இருந்தார்கள் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. மேற்படி 1, 2 பிரதிவாதிகள்தான் வாடகைதாரர்களாக இருந்து வந்தார்கள் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் இருந்த இடத்திற்கு தெற்குபுறமாக 4 கடைகள் தாவா சொத்தின் வழியாக இறங்கி செல்வதுபோன்ற அமைப்பு இருந்து வந்தது என்றால் சரியல்ல, அவர்கள் இடத்திலேயே 3 அடி தடம் விட்டுள்ளார்கள். 1, 2 பிரதிவாதிகள் 3 அடி தடம் விடவில்லை என்றும், அப்படி அவர்கள் தடம் விட்டிருந்தால் நீதிமன்ற ஆணையர் அறிக்கையிலேயே அதுபற்றி சொல்லியிருப்பார்கள் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் 11 ஆண்டுகாலம் வாடகைக்கு இருந்து வந்த கடையையே கிரயத்திற்கு வாங்கிவிட்டார்கள் என்றால் கேள்விபட்டுள்ளோம், அதுபற்றி நேரடியாக தெரியாது. மேற்படி 1, 2 பிரதிவாதிகள் இருந்த இடத்தில் முதல் தளம் இருந்தது. 1, 2 பிரதிவாதிகள் கிரயம் பெற்ற பின்பு தெற்குபுறம் இருந்த வாசலை அடைத்துவிட்டார்கள் என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் எந்த நிலையில் வாடகைக்கு இருந்தார்களோ அதேநிலையில்தான்

கடையினை கிரயம் பெற்றார்கள் என்றும், அவர்கள் மேற்படி கடையை விரிவாக்கம் எதுவும் புதிதாக மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல, தெற்குபுறம் உள்ள முன்பகுதியை மட்டும் அடைத்தார்கள் என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் உள்ள கடையினை முதலில் கோவிந்தராஜ்செட்டியார்தான் கட்டியுள்ளார் என்றும், நாங்கள் அதனை பொறுத்து எந்த ஆட்சேபனை செய்யவில்லை என்றால் அது பழைய நிகழ்வுகள் அதுபற்றி தெரியாது. எனக்கு எல்லாவிவரங்களும் தெரிந்தே வழக்கிற்காக தெரியாது என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் உள்ள கட்டிடத்தை மேற்படி கோவிந்தராஜ் செட்டியார் கட்டியுள்ளார் என்றும் அப்போது ஒரே சமூகம் என்பதால் அனுமதித்துவிட்டு தற்போது ஆட்சேபிக்கிறேன் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் கட்டிடத்தை எந்த மாற்றமும் செய்யவில்லை என்றும், பழைய கட்டிடம் என்பதால் அதனை மராமத்து செய்தார் என்றால் சரியல்ல. கோவிந்தராஜ் செட்டியார் கட்டியுள்ள கட்டிடத்தில்தான் 1, 2 பிரதிவாதிகள் கிரயம் பெற்ற பின்பும் இருந்து வருகிறார்கள் அதில் எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாவாவில் கேட்டுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. கோவிந்தராஜ் செட்டியார் தெற்கு புறமாக 4 கடைகளை வைத்து பயன்படுத்தி வந்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு வடபுறத்தில் 3, 4 பிரதிவாதிகள் நிலம் உள்ளது. 1977ம் ஆண்டில் தாவா சொத்தின் தென்புறத்தில் உள்ள சொத்தினை 3ம் பிரதிவாதி கிரயம் வாங்கியுள்ளார் என்றால் அது தெரியும். 1979ம் ஆண்டே மேற்படி இடத்தில் 3ம் பிரதிவாதி ஒரு மருத்துவமனை கட்டினார் என்றால் மருத்துவமனை கட்டினார் எந்த ஆண்டு என்று எனக்கு தெரியாது. 3ம்பிரதிவாதி மருத்துவமனையானது அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தில்தான் கட்டியுள்ளார் என்றும், அவர் எந்தவித ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றால் சரியல்ல, மேல் பகுதியை கொஞ்சம் முன்னோக்கி கட்டியுள்ளார். அப்படி கட்டியிருந்தால் நான் 40 ஆண்டுகளுக்கு முன்பே ஆட்சேபனை செய்திருப்பேன் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி மருத்துவமனைக்கு பின்னால் கார் நிறுத்தக்கூடிய இடம் வைத்துள்ளார். 3ம் பிரதிவாதி கட்டிடம் கட்டப்பட்டதில் இருந்தே தாவா இடத்தின் வழியாகத்தான் சென்று வந்தார் என்று சொன்னால் தாவா இடமானது காலி இடமாக இருந்ததால் சென்று வந்தார். தாவா சொத்தின் வழியாகத்தான் மருத்துவமனைக்கு நோயாளிகள் அவசர ஊர்தியில் வந்து செல்லும் என்றால் சரியல்ல, அவர்களுக்கு பேருந்து நிலையத்திலிருந்து தனியாக வழி உள்ளது. நான் பேருந்து நிலையத்தில் இருந்து வரலாம் என சொல்வது புது தெருவின் வழியாகத்தான் மருத்துவமனைக்கு வர முடியும். வழக்கு சொத்தின் வழியாகத்தான் அவசர ஊர்திகள் மருத்துவமனைக்கு வந்தபின்பு தர்மபுரி ரோட்டிற்கு செல்லும் என்றால் அவ்வப்போது வந்திருக்கலாம். 3, 4 பிரதிவாதிகளின் இடத்திற்கு வரை மண் ரோடு உள்ளது. அதனை அடுத்து 5, 6, 7ம்

பிரதிவாதிகள் வீடு வரை மேற்படி மண் பாதை செல்கிறது. 5, 6, 7 பிரதிவாதிகள் காலி மனை நிலமாகத்தான் நிலத்தினை வாங்கினார்கள். மேற்படி 5, 6, 7 பிரதிவாதிகள் வீடு கட்டும்போது அதற்கு தேவையான பொருட்களை தர்மபுரி மெயின்ரோட்டிலிருந்து எளிதாக அவர்கள் இடத்தில் செல்வதற்காக தாவா தடத்தின் வழியாக சென்றார்கள் என்றால் சரியல்ல. அவர்களுக்கு தனியாக தடம் உள்ளது, அதன் வழியாகத்தான் செல்வார்கள். 5, 6, 7 பிரதிவாதிகளுக்கு வேறு தடமானது பேருந்து நிலையத்திலிருந்து சுற்றிதான் அவர்கள் இடத்திற்கு வரமுடியும் என்றால் சரிதான். பட்டா எண்.81 1S வழியாகத்தான் வீடு கட்டுவதற்கான பொருட்களை கொண்டு சென்றார்கள் என்றால் எனக்கு சர்வே எண்கள் தெரியாது. பட்டா எண்.81 1A என்பது புதுதெரு என்ற இடம் தொடர்ந்து வருகிறது என்றால் எனக்கு சர்வே எண்கள் தெரியாது. பட்டா எண்.81 1S, 1A. 1 N வழியாகத்தான் பொதுமக்கள் பல வருடங்களாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணைதொடர்ச்சி பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒப்பம்/PW1
ஒப்பம்/சார்பு நீதிபதி, ஓமலூர்.